# JPMorgan Chase & Co.

*Parent company of* **JPMorgan Chase Bank, National Association**

## JPMorgan Chase & Co.
## 2021 டிசம்பர் 31க்கான ஒருங்கிணைக்கப்பட்ட வருமான அறிக்கையின் சுருக்கம்

| **வருமானம்** | *மில்லியன் கணக்கில் தலா பங்கு விவரம் நீங்கலாக* |
|---|---|
| வங்கி முதலீட்டுக் கட்டணங்கள் | $ 13,216 |
| அடிப்படைப் பரிவர்த்தனைகள் | 16,304 |
| கடனளிப்பு மற்றும் வைப்பு தொடர்புடைய கட்டணங்கள் | 7,032 |
| சொத்து நிர்வாகம், நிர்வாகம் மற்றும் தரகுகள் | 21,029 |
| முதலீட்டுப் பங்குப்பத்திர நட்டங்கள் | (345) |
| அடமானக் கட்டணங்களும் தொடர்புடைய வருமானமும் | 2,170 |
| அட்டை வருமானம் | 5,102 |
| இதர வருமானம் | 4,830 |
| **வட்டி சாரா வருமானம்** | **69,338** |
| வட்டி வருமானம் | 57,864 |
| வட்டிச் செலவுகள் | 5,553 |
| **நிகர வட்டி வருமானம்** | **52,311** |
| **மொத்த நிகர வருமானம்** | 121,649 |
| கடன் இழப்புகளுக்கான ஒதுக்கு | (9,256) |
| **வட்டி சாரா செலவுகள்** | |
| ஊழியர் அனுகூலங்கள் | 38,567 |
| அனுபோகச் செலவுகள் | 4,516 |
| தொழில்நுட்பம், தொடர்பு, சாதனச் செலவுகள் | 9,941 |
| நிபுணத்துவம் மற்றும் வெளிச்சேவைகள் | 9,814 |
| சந்தைப்படுத்தல் செலவுகள் | 3,036 |
| இதர செலவுகள் | 5,469 |
| **மொத்த வட்டி சாரா செலவினம்** | **71,343** |
| **வருமான வரி செலவுக்கு முந்திய வருமானம்** | 59,562 |
| வருமான வரி செலவு | 11,228 |
| **நிகர வருமானம்** | **$ 48,334** |
| **பொது பங்குதாரர்களுக்குரிய நிகர வருமானம்** | **$ 46,503** |
| **பொதுப் பங்கு ஒன்றின் நிகர வருமான விவரம்** | |
| பங்கு ஒன்றின் அடிப்படை வருமானம் | $ 15.39 |
| பங்கு ஒன்றின் ரொக்கமாக்கிய வருமானம் | $ 15.36 |

## JPMorgan Chase & Co.
## 2021 டிசம்பர் 31க்கான ஒருங்கிணைக்கப்பட்ட இருப்பு நிலைக் குறிப்பின் சுருக்கம்

| **சொத்துகள்** | *மில்லியன் கணக்கில்* |
|---|---|
| ரொக்கம் மற்றும் வங்கிகளிடமிருந்து வரவேண்டியவை | $ 26,438 |
| வங்கிகளில் இருப்புகள் | 714,396 |
| விற்கப்பட்ட கூட்டரசு நிதிகளும் மறுவிற்பனை உடன்பாட்டின் கீழ் வாங்கப்பட்ட பத்திரங்களும் | 261,698 |
| கைமாற்று பங்குப் பத்திரங்கள் | 206,071 |
| வர்த்தக சொத்துகள் | 433,575 |
| முதலீட்டுப் பங்குப் பத்திரங்கள் (கடன் இழப்புக்கான நிகர ஒதுக்கீடு நீங்க) | 672,232 |
| கடன் (கடன் இழப்புகளுக்கான நிகர ஒதுக்கீடு $16,386) | 1,061,328 |
| ஒன்றுகூடின வட்டி மற்றும் வரவேண்டிய கணக்குகள் | 102,570 |
| கட்டடமும் சாதனமும் | 27,070 |
| நல்லெண்ண மதிப்பு, அடமானக்கடன் அடைப்பு உரிமைகள், இதர கண்கூடற்ற சொத்துகள் | 56,691 |
| இதர சொத்துகள் | 181,498 |
| **மொத்த சொத்துகள்** | **$ 3,743,567** |
| **பொறுப்புகள்** | |
| இருப்புகள்[1] | $ 2,462,303 |
| வாங்கப்பட்ட கூட்டரசு நிதிகளும் மறுவிற்பனைக் உடன்பாட்டின் கீழ் கடனளிக்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட பங்குப் பத்திரங்களும் | 194,340 |
| குறுகியகாலக் கைமாற்றுகள் | 53,594 |
| வர்த்தக பொறுப்புகள் | 164,693 |
| கொடுக்கப்பட வேண்டிய கணக்குகள் மற்றும் இதர பொறுப்புகள் | 262,755 |
| ஒருங்கிணைக்கப்பட்ட மாறுபடும் வட்டி நிறுவனங்கள் வெளியிட்ட சாதக பாத்தியதை | 10,750 |
| நீண்டகால கடன் | 301,005 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **3,449,440** |
| **மொத்தப் பங்குதாரர்களின் பங்குமுதல்** | 294,127 |
| **மொத்தப் பொறுப்புகளும் பங்குதாரரின் பங்குமுதலும்** | **$ 3,743,567** |

*அனைத்து தொகைகளும் யுஎஸ் டாலர்களில்*

JPMorgan Chase & Co. யின் 2021 டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்குரிய படிவம் 10-Kல் உள்ளற ஆண்டறிக்கையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகளின் குறிப்புகள், குறிப்பிடத்தக்க துணைக் நிறுவனங்கள் பட்டியல் மற்றும் இயக்குநர் கழகத்தின் உறுப்பினர்கள் பட்டியல் அடங்கிய அறிக்கையின் பிரதிகளைச் சிங்கப்பூர் அலுவலகம் JPMorgan Chase Bank, National Association முகவரியில் கேட்டுப் பெறலாம். ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகளின் குறிப்புகள் இந்த அறிக்கைகளின் ஒரு முக்கிய அங்கமாகும். JPMorgan Chase & Co. யின் தணிக்கையான ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகளின் முழுத் தொகுப்பையும் பார்க்காமல் நிதி நிலையையும் நடைமுறைப் பலாபலனையும் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாது.

விதிகளுக்குட்பட்ட மூலதன விகிதங்கள்:

2021 டிசம்பர் 31ல் இடர் உள்ள மூலதன விகிதங்களைக் கணக்கிடுவதற்கான மத்திய காப்புநிதி வாரிய ஆளுநர் மன்ற மூலதன வழிகாட்டிகளின்கீழ், JPMorgan Chase & Co. யின் பொது பங்கு முதல்படி மூலதனம் (CET1), படி 1 மூலதனம் மற்றும் மொத்த மூலதனம் விகிதங்கள் பின்வருமாறு:

| | Basel III நிலைப்படுத்தியது | Basel III மேம்படுத்தியது |
|---|---|---|
| CET1 மூலதன விகிதம் | *13.1%* | *13.8%* |
| படி 1 மூலதன விகிதம் | *15.0%* | *15.9 %* |
| மொத்த மூலதன விகிதம் | *16.8%* | *17.2%* |

*(1) வைப்புத் தகவல்கள்:*

மத்திய வைப்புக் காப்புறுதி நிறுவனத்தின் ("FDIC") வைப்புக் காப்புறுதி நிதி குறிப்பிட்ட யு.எஸ். உள்நாட்டு வைப்புகளுக்குக் காப்புறுதி வழங்குகிறது. காப்புறுதியுள்ள ஒவ்வொரு வங்கியிலும், ஒவ்வொரு கணக்குரிமை பிரிவுக்கும், ஒவ்வொரு வைப்புத்தாரருக்கும் $250,000 வரையிலான யு.எஸ். உள்நாட்டு வைப்புகளுக்கு FDIC காப்புறுதி உண்டு. ஆனால், அமெரிக்கா, அதன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வெளியே அமைந்துள்ள காப்புறுதிப் பெற்ற நிறுவனத்தின் வங்கி அலுவலகங்களில் மட்டுமே கொடுக்கப்படக்கூடிய வைப்புகளுக்கு FDIC காப்புறுதி பொருந்தாது. மேலும் அமெரிக்க வங்கி ஒன்று பொறுப்பு அதிகாரிகளின் வசம் இருக்கும் பட்சத்தில் வெளிநாட்டுக் கிளை வைப்புகள், வங்கியின் யு.எஸ். உள்நாட்டு வைப்புகளைவிடக் குறைந்த அளவு உரிமையையே கொண்டு இருக்கும். அதோடு அனைத்து யு.எஸ். உள்நாட்டு வைப்பாளர்களின் கோரிக்கைகள் நிர்வாகச் செலவுகள் எல்லாம் போக பொறுப்பு அதிகாரிகளிடம் பணம் மீதம் இருந்தால் அதைக் கொண்டு வங்கியின் பொதுவான ஈடு இல்லாத கடனீந்தோருக்கு இணையான விகிதாசார முறைப்படி பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

### பதிவு பெற்ற சுயேட்சை பொது கணக்காய்வு நிறுவனத்தின் அறிக்கை

*JPMorgan Chase & Co. பங்குதாரர்கள் மற்றும் இயக்குநர்கள் மன்றத்திற்கு.*

நாங்கள், பொது நிறுவன கணக்குச் சரிபார்ப்புக் கழகத் தரங்களுக்கு (அமெரிக்க) ஏற்ப, JPMorgan Chase & Co. மற்றும் அதன் துணை நிறவனங்களின் ("நிறுவனம்") 2021 மற்றும் 2020 டிசம்பர் 31ல் நிலவியபடி ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்புகளையும், 2021 டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்குரிய நிறுவனத்தின் ஆண்டு அறிக்கையில் படிவம் 10-Kல் இடம்பெறும் 2021 டிசம்பர் 31 முடிவுற்ற மூன்றாண்டு காலத்திற்குரிய ஒவ்வோர் ஆண்டின் சார்புள்ள ஒருங்கிணைக்கப்பட்ட வருமான அறிக்கைகள், விரிவான வருமானம், பங்குதாரர்களின் பங்குமுதல் மாற்றங்கள் மற்றும் ரொக்கப் புழக்கம் (இங்கு படைக்கப்படாதது) ஆகியவற்றைத் தணிக்கை செய்திருக்கிறோம்; மேலும் இதன் தொடர்பில் 2022 பிப்ரவரி 22ம் தேதியிடப்பட்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம். ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் குறித்த ஆட்சேபனைக்கு இடமில்லாத கருத்து இந்த அறிக்கையில் உள்ளடங்கும்.

எங்கள் கருத்துப்படி, இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகளின் சுருக்கம், எல்லா அம்சங்களிலும், அது பெறப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகளின் அடிப்படையில், நியாயமான முறையில் படைக்கப்பட்டுள்ளன.

PricewaterhouseCoopers LLP
300 Madison Avenue,
New York, New York 10017